## முழு பூமியும் உயிருள்ள கடவுளின் முகத்தின் சின்னம்.

புனித ஜோன் டமாஸ்கஸ்







### இன்றைய இறைவார்த்தை:

ஞானநூல்: 2: 12,17-20

திபா: 54: 3-6,8

யாக்கோபு : 3: 16-4:3

மாற்கு 9: 30-37

இன்று நம்மைப் பற்றி நடப்பவை அனைத்தும் நேர்மாறாக நடப்பதைக் காண்கிறோம். நம்மில் பலர் நம்முடைய சொந்த ‘அடையாளத்தை’ எடுத்து செல்கிறோம். நாம் செய்வதை அனைவருக்கும் காட்டுகின்றோம். வெளிப்படையாக சொல்லவேண்டுமென்றால், நம்முடைய சாதனைகளை வெளிப்படையாகக் காட்டிப் பெருமைப்படுகின்றோம். பிறரைவிட நாம் சிறந்தவர்களாக இருக்க நினைத்து திருஅவையில் கூட போட்டிபோடுகின்றோம். பிறரைவிட நாம் “பெரியவர்கள்’ என்று நினைத்துப் பெருமை கொள்கின்றோம்.

உண்மையில் சொல்லப்போனால், சில சமயங்களில் பலவீனமான மற்றும் தவறான நமது பார்வைகளையும் வழிகளையும் விளம்பரப்படுத்த சமூக ஊடகங்களையும் பயன்படுத்துகிறோம். உண்மையானது, சரியானது என்பதைவிட இந்த உலகில் புகழும் வலிமையும் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. பிறரோடு நமக்கிருக்கும் சிறிய ‘போராட்டங்களில்’ யாரும் தோற்றுப்போக விரும்பவில்லை. அனைத்தையும் பெறவிரும்புகிறோம். இப்போது எங்களுக்கு நீதி வேண்டும். புனித யாக்கோபு கூறுகிறார். “பொறாமையும், கட்சி மனப்பான்மையும் உள்ள இடத்தில் குழப்பமும், எல்லாக் கொடுஞ்செயல்களும் நடக்கும்”

ஆனாலும் நமக்கு முன் இருக்கும் போதனைகளுடன் இவையனைத்தும் முரண்பாடானவை. நாம் கடவுளால் கவனிக்கப்படவேண்டுமென்றால், மிக எளிது, உலகின் பார்வையில் நாம் கவனிக்கப்படாமல் இருக்கவேண்டும். மீட்பு நமக்கு வேண்டுமென்றால், நாம் நம்முடைய சகோதர சகோதரிகளுக்குப் பணியாளராக இருக்கவேண்டும். இது பலருக்கும் மிகவும் கடினமான போதனை.

எனினும், நம்பிக்கை நிறைந்த இந்த உலகில் நம்மால் அறியப்படாத மாபெரும் ‘வலிமைவாய்ந்தவர்கள்’ நம்மோடு நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நற்செயல்களை அமைதியாகவும் உறுதியாகவும் செய்கிறார்கள். அவர்கள் ஒருவேளை இப்போது சந்தித்த ஒரு அருட்சகோதரி உங்களுக்காக இறைவேண்டல் செய்பவராக இருக்கலாம்; ஒரு தோட்டவேலை செய்பவராக இருக்கலாம்; தன்னில் துயரத்தில் இருந்துகொண்டே அற்ப வருமானத்தில் தன் அண்டை வீட்டாரை கவனித்துகொள்பவராக இருக்கலாம்; அன்றாட திருப்பலிக்கு ஓயாமல் தயார் செய்யும் திருப்பண்ட பணியாளராக கூட இருக்கலாம். தன்னைப் பற்றி அதிகம் அக்கறை காட்டாமல் நோயாளிக்கு பணிவிடை செய்யும் நபராகக் கூட இருக்கலாம். ஒரு கள்ளங்கபடற்ற சிறுகுழந்தையைப் போல அனைத்தையும் இலவசமாக செய்பவராக இருக்கலாம். கடைசியானோர் என்று உலகம் நினைக்கும் மக்களாக இருந்தும் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்போரில் இயேசு மகிழ்ச்சியடைகிறார்.

மீதமிருக்கும் மற்றவர்களைப் பற்றி என்ன? வேலிக்கு எந்தப் பக்கதில் நாம் இருக்கிறோம்? ✣

INTERNAL CIRCULATION ONLY
BUL 38/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org

NEW WAY OF BEING CHURCH

newbec

22 செப்டம்பர் 2024
பொதுக்காலம் ஆண்டின் 25 ஆம் ஞாயிறு

### மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

மண்ணுலகின் அழுகுரலைக் கேட்டல்




# நாம் முதல்வரா அல்லது கடைசியானவரா?

முதலானோர் கடைசியானவராக இருக்கவேண்டும். ஆண்டவரும் போதகருமானவர் அடிமையாகவும், பணியாளனாவும் இருக்கவேண்டும். இதைத் தான் ஆண்டவர் போதித்தார் அதை செயலிலும் செய்துகாட்டினார். அடிமையைப் போலவும், குற்றவாளியைப் போலவும் அவர் இறந்தார். நம்மில் முதலானோர் கடைசியானவராகவும் இருக்கட்டும்.